பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 06 புதன்கிழமை [23-10-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 323

## கடும் சண்டைக்கு மத்தியில் கடல் வழியாக

# வலைப்பாட்டில் தரையிறங்கிய படை

# பூநகரி-சங்குப்பிட்டி வரை வந்தது!

## மும்முனைத் தாக்குதல்கள் நேற்று முழுவதும் உக்கிரம்

யாழ்ப்பாணம், அக்டோபர் 23

ஸ்ரீலங்காப் படையினர் நேற்று அதிகாலை முதல் பெருத்த எடுப்பில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின்போது, வலைப்பாட்டில் பெரும் எண்ணிக்கையான துருப்புகள் தரையிறக்கப்பட்டன.

விடுதலைப் புலிகளின் கடும் எதிர்த் தாக்குதலுக்கு மத்தியில் —

தரையிறங்கிய துருப்புகள் நேற்று முழுநாளும் கடும் மும்முனைத் தாக்குதல்களை நடத்திய வண்ணம் பூநகரி - சங்குப்பிட்டி இறங்குதுறைப் பகுதிக்கு நகர்ந்து முன்னேறின.

படையினர் தரையிறங்கத்தின் போதும், நகர்வின் போதும் வானத்திலிருந்தும், கடலிலிருந்தும், தரையிலிருந்தும் கடும் மும்முனைத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதிகாலை 4-45 மணியிலிருந்தே ஆறு பொம்மர்கள், இரண்டு அவ்ரோக்கள், இரண்டு ஹெலிகள், ஒரு சீ-பிளேன் ஆகியன மாறி, மாறித் தாக்குதல்களை நடத்தின.

சங்குப்பிட்டி — கேரதீவு இறங்குதுறைகள் விடியற் பொழுதிலேயே விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகின.

அதேவேளை பூநகரிக்கு

[3 ஆம் பக்கம் பார்க்க]

### கண்ணிவெடி ஆபத்தாம்!

## ஆனையிறவுக்குக் கிழக்கே நடமாடுவதற்குத் தடை!

### இராணுவத் தரப்பு அறிவிப்பு

கொழும்பு, அக். 23

ஆனையிறவுக்கும் வெற்றிலைக்கேணிக்கும் இடைப்பட்ட எட்டுக் கிலோமீற்றர் தூரப் பாதையில் தாங்கள் கண்ணிவெடிகளைப்புதைத்து வைத்திருப்பதாக ஸ்ரீலங்கா இராணுவம் அறிவித்திருக்கிறது.

இந்தப் பிரதேசத்திலுள்ள ஒன்பது பகுதிகள் நேற்றுப் பிற்பகல் 2 மணியிலிருந்து மறு அறிவித்தல் வரை மக்கள் நடமாட்டத்துக்குத் தடை செய்யப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது.

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட சங்கத்தார் வயல், புல்வெளி, புதுமடம், நித்தியவற்றை, கட்டைக்காடு, முள்ளியான், பெரிய பச்சிலைப்பளை, பொதிஊண்டுக்குளம், இயக்கச்சி ஆகியவையே அந்த ஒன்பது பகுதிகளுமாகும்.

### வீரமரணம்

யாழ்ப்பாணம், அக். 23

கீரிமலைப் பகுதியில் நேற்று நடந்த மோதல் சம்பவத்தில் வீரவேங்கை வாசன் (பரமலிங்கம் யசேந்திரன் - மானிப்பாய்) வீரமரணமடைந்தார். [ஓ]

### வடமராட்சி கிழக்கில் பீரங்கித் தாக்கு

யாழ்ப்பாணம், அக். 23

வடமராட்சி கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு தொடக்கம் நேற்று நண்பகல் வரை பீரங்கிப் படகுகளில் இருந்து படையினர் விட்டு விட்டு தாக்குதல்களை நடத்தினர்.

சேத விவரம் தெரிய வரவில்லை. [ஓ]

## எழுவைதீவில் மக்கள் கோவிலில் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், அக். 23

எழுவைதீவில் படையினரிடம் சிக்கியுள்ள சுமார் 250 தமிழர்கள் கோவில் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அங்கிருந்து தப்பி வந்த ஒருவர் தகவல் தெரிவித்துள்ளார் என அறிய வருகிறது.

அங்குள்ள மக்கள் எங்கும் வெளியேறிச் செல்லாதபடி, கோவிலில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் —

போதிய உணவு, வைத்திய வசதியின்றியுள்ள அவர்கள் படையினரால் துன்புறுத்தப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

## களுத்துறைச் சிறையில் 200 தமிழர் உண்ணாவிரதம்

கொழும்பு, அக். 23

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இருநூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்க் கைதிகள் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். அவர்களில் பலரின் உடல்நிலை மோசமாக உள்ளது.

கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை ஆதாரம்காட்டி பி.பி.ஸி. நேற்றிரவு இத்தகவலை வெளியிட்டது.

விசாரணை ஏதுமின்றி ஒரு வருடத்துக்கு மேலாக தாம் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்தே அவர்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாகவும்—

இவர்கள் விடயத்தில் உடன் தலையிட்டு அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதியைக் கடிதமூலம் கேட்டுள்ளதாக பி.பி.ஸி தெரிவித்தது.

விசாரணையின்றி குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் — காரணமின்றி — இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உண்ணாவிரதம் இருப்போரில் அதிகமானோர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று அறியவருகிறது. [உ-8]

## போக்குவரத்து தடைப்பட்டது!

பூநகரிப் பகுதியில் ஸ்ரீலங்கா படைகள் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளை அடுத்து, குடாநாட்டுக்கு வெளியேயான போக்குவரத்து தடைப்பட்டிருக்கிறது.

சங்குப்பிட்டி துறைப் பக்கத்தில் இராணுவம் நிலை கொண்டிருப்பதால் அந்தப் பகுதி ஊடான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த 16 மாதங்களாக ஆனையிறவுடனான போக்குவரத்து தடைப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆனையிறவுக்கு கிழக்கே கொம்படிப்பாதையில் மக்கள் நடமாடத் தடை விதித்து ஸ்ரீலங்காப் படைகள் அறிவிப்பு விடுத்திருப்பது தெரிந்ததே. [உ-3]

## மண்டைதீவு ஷெல்கள் நீராவியடியில் விழுந்தன!

யாழ்ப்பாணம், அக். 23

மண்டைதீவுப் பகுதியில் இருந்து யாழ். நகரப் பகுதி மீது நேற்று ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்று நண்பகல் 11.30 மணியளவில் இரண்டு ஷெல்கள் நீராவியடிப் பகுதியில்— மக்கள் குடியிருப்பு மத்தியில் விழுந்து வெடித்தன. எனினும் ஷெல் விழுந்த இடத்தில் அந்நேரம் ஒருவரும் இருக்காததால் உயிரிழப்புகள் ஏற்படவில்லை.

இதேசமயம் நான்கு ஷெல்கள் கொட்டடிப் பகுதியில் விழுந்து வெடித்தன. இத [illegible] சேதம் [illegible]

நேற்று மாலை 5. 30 மணியளவில் யாழ். நகரம் மற்றும் கொழும்புத்துறைப் பகுதியில் ஹெலி ஒன்று வேட்டுகளைத் தீர்த்தது. [உ-15 ஓ-3]

# யாழ் நகரப்பகுதியில் அவ்ரோ குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம், அக். 23

யாழ். நகரப் பகுதி மீது நேற்று மூன்று தடவைகள் அவ்ரோ விமானம் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தியது.

இதனால் பல கட்டடங்கள் நாசமாகின. யாழ் நகரம் அதிர்ந்தது.

அதிகாலை 5 30 மணிக்கு நகருக்கு வந்த 'அவ்ரோ' திடீரென வீசிய பீப்பாய்க் குண்டுகள் பெரும் சத்தத்துடன் வெடித்ததையடுத்து தூக்கத்திலிருந்த மக்கள் எழுந்து, விழுந்தடித்துக்கொண்டு பாதுகாப்பான இடங்களுக்கு ஓடினர்.

கொட்டடி 'லைடன்' கட்டடத்துக்கு அருகில் உள்ள வீடொன்றின் மீது ஒரு குண்டு விழுந்து வெடித்ததில் நான்கு வீடுகள் பலத்த சேதமடைந்தன.

வீடுகளில் வசித்தவர்கள் ஏற்கனவே அங்கிருந்து வெளியேறிவிட்டிருந்ததால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன.

அவ்ரோ வீசிய மற்றொரு குண்டு கோட்டைக்குச் சமீபமாக விழுந்து வெடித்தது.

பின்னர் பிற்பகல் 3 மணிக்கும் சற்று நேர இடைவெளி விட்டு [illegible] நகரின் [illegible]

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பூநகரிப் பகுதியிலிருந்து மக்கள் இடம் பெயர்வு

யாழ்ப்பாணம், அக். 23

பூநகரிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற அகோர விமான, பீரங்கி, ஷெல் தாக்குதல்களினால் அச்சமடைந்த அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் வேறிடங்களை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர்.

கௌதாரிமுனை, கல்முனை, பள்ளிக்குடா, வில்லடி, மட்டுவில்நாடு, பரம்பன்கிராய், வாடியடி, செட்டியாமடம், ஞானிமடம், கறுக்காய்த்தீவு ஆகிய பகுதிகளில் இருந்து மக்கள் கிளிநொச்சி, உருத்திரபுரம், முழங்காவில், நாச்சிக்குடா பகுதிகளை நோக்கி இடம் பெயர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

முதல் தரமான ஜேமன் செப்பேட் ஏழு கிழமைக் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. முற்பணம் கட்டியவர்கள் 25 ஆம் திகதிக்கு முன் குட்டிகளை எடுத்துச் செல்லவும். சேவியர் 249, பலாலி வீதி, கந்தர்மடம். [18529]

ஹொண்டா சி-70 எக்கொனோ பவர் (சிவப்பு நிறம்) விற்பனைக்குண்டு. தொடர்பு:- க. விமலேந்திரன் யூனிவேர்சல் வீடியோ 40 - ஏ, அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம். (18512)

### மினிபஸ் சேவை

பருத்தித்துறை அக். 23 பருத்தித்துறை - யாழ்ப்பாணம் மினிபஸ் சேவை மீண்டும் நேற்று செவ்வாய் முதல் வழமைபோல் நடைபெறுகின்றது. (இ-118)

### இடமாற்றம்

புங்குடுதீவில் இயங்கிவந்த ''இரட்ணம் வைத்திய சாலை'' சகல வசதிகளுடன் இல. 129, ஸ்ரேசன் றோட் (புகையிரத நிலையம் முன்பாக) யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து சேவையாற்றுகிறது. தீவகத்தில் வழங்கப்பட்ட சிறந்த வைத்திய சேவை தொடர்ந்து வழங்கப்படும். (18531)

### ஜோதிடம்

தீராத கடன் தொல்லை, தொழில் நட்டம் கல்விக் குழப்பம், பருவத்தில் விவாகம் நடவாமை போன்றவைகள் நீங்கி அதிர்ஷ்டத்துடன் வாழ சாதகத்துடன் நேரில் வரவும். சாந்தி பரிகாரங்களுடன் யந்திரங்களும் வழங்குகிறோம் ஸ்ரீசக்தி கணேச உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், [ஸ்ரீ வீரமாகாளி கோவிலடி [146, பருத்தித்துறை வீதி] நல்லூர். [18513]

## 4 ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



அன்னையின் மடியில்: 10 — 5 — 1927

அன்னையின் அழிவில்: 23 — 10 — 1987

### சி. கந்தவேல்

[இளைப்பாறிய, புகையிரத பரிசோதகர்]

ஆண்டுகள் நான்கு சென்றாலும் மறக்க முடியவில்லையே! உங்கள் அன்பு முகம்! ஆறுதல் கூறி எம்மை அணைத்தெடுக்க யாருமில்லையே ஐயா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

113, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம். [18519]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 8 — 9 — 1929

மறைவு: 23 — 9 — 1991

### திருமதி கந்தையா அன்னம்மா

எங்கள் வாழ்வின் அன்புத் தெய்வமாய், வழிகாட்டியாய் வாழ்ந்த எமது அன்புத் தாயவர்களின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியை இன்று (23-10-1991) புதன் கிழமை ஐயர் வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

– குடும்பத்தினர்.

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி (சி/0742)


வெளிவந்துவிட்டது! விற்பனையாகின்றன!!

அரசாங்க எழுதுனர் சேவை
கிராம அலுவலர் சேவை
போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி

★ மொழித்தேர்ச்சி ★ பொது உளச்சார்பு
★ பொது அறிவு

அஸ்ரன் வெளியீடு: விலை 115/-
[எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம்]
[சி 0740]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

23 — 10 — 1991



பிறப்பு: 22 — 06 — 1924

இறப்பு: 23 — 09 — 1991

### அமரர் S.R. பொன்னம்பலம்

[ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர்]

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, சகோதரன்,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கோவிலாக்கண்டி மறவன்
புலோ தடி. [18527

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

வீரவேங்கை 2ஆம் லெப்ரினன்ட்

### ● சேரன் (மாணிக்கம்) ●

இராசரத்தினம் ஜெயராஜ் (லவன்)

தாயின் மடியில்: 28 - 03 - 1967

தாயக மண்ணில்: 09 - 09 - 1991



எங்கள் அன்பான மகனே! நீர் ஒரு ஆலமரம் என்று அந்த நிழலில் அனைவரும் வீற்றிருந்தோம்.

பொறுமையுடன், வளர்த்தவர்களை எல்லாம் பெருமையுடன் செய்துவிட்டு, மணலாற்றில் மாபெரும் தாக்குதலில் எதிரியையும் வீழ்த்திவிட்டு வீரமரணத்தைத் தழுவிய மாவீரனுக்கு எங்கள் கண்ணீர் பூக்கள்.

23-10-1991 இன்று புதன்கிழமை நடைபெறும் கிரியைகளில் கலந்து கொண்டு (லவனின்) ஆத்மா சாந்தி அடைய அனைவரையும், மற்றும் இயக்கத் தோழர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அப்பா, அம்மா,
தங்கைமார்,
தம்பிமார்.

கும்பிழாவளை,
அளவெட்டி. [18521]

## மாவீரர் தின நிகழ்ச்சிகள்: அனுமதிபெறப்படவேண்டும்

யாழ்ப்பாணம், அக். 23

அடுத்த மாதம் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை கொண்டாடப்படவுள்ள தமிழீழத் தேசிய மாவீரர் வாரத்தையொட்டி, யாழ். மாவட்டத்தில் அரங்கேறவுள்ள சகல கலை நிகழ்ச்சிகளுக்கும் விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் அங்கீகாரம் கட்டாயமாகப் பெறப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரங்கேற உள்ள கலை நிகழ்ச்சிகளின் எழுத்துப்பிரதிகளை சம்பந்தப்பட்டவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பாக கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்ட கலை பண்பாட்டுக் கழகச் செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அனுமதி பெற்ற நிகழ்ச்சிகளை மட்டுமே மாவீரர் வாரத்தில் அரங்கேற்ற முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## மட்டக்களப்புப் பகுதியில் பொலீஸார் மீது அதிரடி

யாழ்ப்பாணம் அக் 23

மட்டக்களப்பு முஸ்லீம் கொலனி பகுதியில் கடந்த ஞாயிறன்று ரோந்து சென்ற பொலீஸார்மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் பொலீஸாருக்குப் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோதலின்போது விடுதலைப் புலிகளின் தரப்பில் ஜெயா (தங்கையா ஜெயக்குமார்—மட்டக்களப்பு), ஜெகன் (அன்ரனி சந்திரகுமார்—மட்டக்களப்பு ஆகிய இருவரும் வீரமரணம் அடைந்தனர் [ஒ]

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், அக் 23

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தில் இன்று அங்குரார்ப்பணம் செய்யப்படவிருந்த கல்வி அபிவிருத்திக் கழகக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். [ஒ]

## இன்று

யாழ்ப்பாணம், அக் 23

யாழ். பரியோவான் இராணுவ கழக சகல உறுப்பினர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று இன்று காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது [ஒ]

## சமயக் கருத்தரங்கு

''பன்மைறைச் சூழலில் நற்செய்திப் பணி'' என்னும் பொருளில் அருட் திரு ஜே விவேகானந்தன் B D அவர்கள் 24 10 91 வியாழன் பி ப 4 00 மணிக்கு பரியோவான் சபை மண்டபத்தில் அருட் திரு கலாநிதி ஐ ஜெபநேசன் விக்டர் தலைமையில் நடாத்தப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

— இறைமக்கள் பயிற்சி நிலையம் —

[18532]

வண். வடமேற்கு

### ஸ்ரீமங்கள மஹாகாளி அம்பாள தேவஸ்தானம்

## திருவூஞ்சற்பா நூல் வெளியீடு

இடம்: ஆலய மண்டபம்
காலம்: 24 - 10 - 1991 வியாழக்கிழமை
பகல் 11-00 மணி

★ இயற்றியவர்:-
காலஞ்சென்ற
பிரம்மஸ்ரீ பி.பா. பஞ்சாட்சரக் குருக்கள் J.P. அவர்கள் (இந்து பிரதமகுரு)

★ தலைமை:-
திரு. க. நாகேஸ்வரன் M.A. அவர்கள்
[விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்]

★ வெளியீட்டுரை:-
''கவிமாமணி'' ந. வீரமணி ஐயர் அவர்கள்
[முன்னாள் விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை]

★ சிறப்புப் பிரதி பெறுநர்:-
சிவதர்மவள்ளல் க. கனகராசா J.P. அவர்கள்
[உரிமையாளர், மில்க்வைற் தொழிலகம்]

★ தேவஸ்தான நாதஸ்வரக் கலைஞர் கௌரவிப்பு:-

● கௌரவம் பெறுபவர்:-
''திருமால் கோட்டை''
பா. கோவிந்தராஜ சிவவடிவேற்பிள்ளை

★ கௌரவ உரை -
திரு. ப. கணேசலிங்கம் B,A. [Hons] அவர்கள்
[விரிவுரையாளர், இந்து நாகரீகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்]

★ நன்றியுரை:-
''புலவர்'' முத்து இராசரத்தினம் அவர்கள்
(இலங்கை வேந்தன் நாடக ஆசிரியர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
தேவஸ்தானம்.

ஸ்ரீ மங்கள மஹாகாளி தேவஸ்தானம்,
வண். வடமேற்கு. 23-10-91 [18528]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## முற்றிலும் முரணானது!

வடக்கு - கிழக்கு மாகாணம் முழுவதிலும் விரைவில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்படும். அதன் பொருட்டு இப்போது இறுதிக் கட்டத் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. — என்று ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்திருக்கிறார்.

சிவில் நிர்வாகம் வேறு. இராணுவ நடவடிக்கை வேறு. இரண்டையும் பிணைத்து, இராணுவ நடவடிக்கை மூலம் தான் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த முடியும் என்ற தாகு நிலையிலேயே அரசாங்கம் இன்னமும் இருக்கிறது என்பதையே ஜனாதிபதியின் கூற்று தெளிவாக்குகிறது. வடக்கு-கிழக்கில் இராணுவத்தின் பொறுப்பில் நிர்வாகத்தை முற்று முழுதாகக் கையளிப்பதே — அதாவது இராணுவ ஆட்சியை உருவாக்குவதே — ஜனாதிபதியின நோக்கம் என்பதும் புலனாகின்றது.

இராணுவ நடவடிக்கை — தாக்குதல் — யுத்தம் — மூலம் சிவில நிர்வாகத்தை உருவாக்க முனைவது —

இனப்பிரச்சினைக்கு, கருத்திணக்கம் மூலம் அரசியல் தீர்வு காண்பது தான் வழி என்று கூறிக்கொண்டு, இராணுவத் தீர்விலேயே கருத்தும் நாட்டமும் செலுத்தி வருவதைப் போன்றதே.

கருத்திணக்கத்துக்கும், சமரசத்துக்கும், தீர்வுக்குமான முயற்சிகள் எவ்வித பலனுமில்லாமல் காலம் வீணவதும், நாடும், மக்களும் சீரழிவதும்தான் மிச்சமாக உள்ளது திரு. பிரேமதாசா ஜனாதிபதியாக வந்தபின்னர் கடந்த இரண்டரை வருடங்களாகத் தீர்வு காண்பதற்கெனக் கூறி நடக்கும் பேச்சுக்கள், விளைவு எதுவும் இன்றி தொடர்ந்து நடக்கின்றன. ஆனால் அரசின் இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்கள் அழிந்து கொண்டிருக்கிறார்கள். இது இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தட்டிக் கழிக்கும் செயற்பாடே.

வடக்கு - கிழக்குப் பிரச்சினை தீர்ந்து தாம் நிம்மதியாக ஆட்சி புரிய வேண்டுமானால், ஜனாதிபதி பிரேமதாசா, தமது அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் திரு. தொண்டமான் கூறுவதற்கு சற்றுச் செவி சாய்ப்பது நல்லது.

வடக்கு - கிழக்குப் பிரச்சினையை ஒத்திப் போட முடியாது; தட்டிக் கழிக்கவும் முடியாது. இனிப்பான பேச்சுக்கள் மூலமும், உபயோகமற்ற வாக்குறுதிகள் மூலமும் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது, கூட்டங்களும் தொடர் மாநாடுகளும் நடத்துவதன் மூலமும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. சாத்தியமானதும், திடமானதுமான அரசியல் தீர்வு ஒன்றின் மூலமே இனப்பிரச்சினைக்கு முடிவு காண முடியும் — என்று அமைச்சர் தொண்டமான் வலியுறுத்தி உள்ளார்.

வடக்கு - கிழக்கில் சிவில் நிர்வாகம் என்ற போர்வையில் ஜனாதிபதி இராணுவ ஆட்சியை உண்டாக்குவதன் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. இதனைக் கடந்த கால அனுபவங்களில் இருந்து ஜனாதிபதி புரிந்து கொள்ளாது போனது; அல்லது புரியாதது போலச் செயலாற்றுவது கவலைக்குரியதாகும். இராணுவ ஆட்சி வழியாக அரசியல் தீர்வு ஒன்று பிறக்கும் என்று நினைப்பது சூரியனை மேற்கில் உதிக்கச் செய்யும் முயற்சி அன்றி வேறல்ல.

## சித்தன்கேணி குண்டு வீச்சு; காயமுற்ற மாது மரணம்

யாழ்ப்பாணம், அக். 23

சித்தன்கேணியில் கடந்த கிழமை இடம்பெற்ற பொம்மர் குண்டுவீச்சில் காயமுற்று ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த வயோதிபப்பெண், நேற்று அதிகாலை அங்கு மரணமானார்.

மகேஸ்வரன் பாலம்பிகை [64 வயது] என்பவரே இறந்தவர் ஆவார்.

குண்டு வீச்சில் இவரது தாயார் பலியானார் என்பதும், மகன் ஒருவரும் காயமடைந்தார் என்பதும் தெரிந்தவையே.

(ஓ-15)

## 4,200 ஆசிரியர் வெற்றிடங்கள்

கொழும்பு, அக். 23

வடக்கு கிழக்கு மாகாணத்தில் மொத்தம் 4 ஆயிரத்து 179 ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளதாக மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், திட்டமிடல் அமைச்சுக்கு அறிவித்துள்ளார்.

தமிழ் மொழி மூலம் கற்பிக்க கிளிநொச்சி மாவட்டத்துக்கு 474 ஆசிரியர்களும், மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 1069 ஆசிரியர்களும், கல்முனைக்கு 798 ஆசிரியர்களும், திருமலை மாவட்டத்துக்கு 726 ஆசிரியர்களும், வவுனியா மாவட்டத்துக்கு 525 ஆசிரியர்களும் தேவைப்படுகிறார்கள். (உ-த)

## சிதறி ஓடியோர் காயமுற்றனர்

யாழ்ப்பாணம், அக். 23

சோரதீவுப் பகுதியில் நேற்றுக் காலை 4-45 மணியளவில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சினை அடுத்து அப்பகுதியில் நின்றவர்கள் சிதறி ஓடினர். ஓடியவர்களில் சிலர் விழுந்து அடியுண்டு காயமடைந்தனர்.

சோரதீவு இறங்குதுறை அலுவலகத்தில் கடமையாற்றிய அலுவலக முகாமையாளர் இ. வன்னியசிங்கம் (வயது 39 — சோரகிலாக் கண்டி) என்பவர் இவ்வாறு காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(உ-15)

## வவுனியாவுக்கு மேலதிக ரயில்

கொழும்பு, அக். 23

கொழும்புக்கும் வவுனியாவுக்கும் இடையில் கடந்த 15 ஆம் திகதி முதல் மேலதிக ரயில் சேவை ஒன்று நடத்தப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கோட்டையில் இருந்து காலை 7 மணிக்கு புறப்படும் இந்த ரயில், பிற்பகல் 2-10 மணிக்கு வவுனியாவைச் சென்றடைகிறது.

பின்னர் பிற்பகல் 3 மணிக்கு வவுனியாவை விட்டு புறப்படும் இந்த ரயில் 4 மணிககு அனுரதபுரத்தைச் சென்றடையும்.

பயணிகள் அங்கிருந்து பஸ் மூலம் கொழும்புக்கு தமது பயணத்தைத் தொடரலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-த)

## அதிபர்கள், ஆசிரியர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், அக். 23

யாழ் கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களுக்கான கூட்டங்கள் கொத்தணி அடிப்படையில் இன்றும் நாளையும் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவிருப்பதாக கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதற்காக—

நல்லூர், கொக்குவில், கொண்டாவில், வண்ணார்பண்ணை வடக்கு கொத்தணிகளில் கடமை புரிபவர்களை இன்று கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்திலும்—

குருநகர், யாழ் நகர், வண்ணார்பண்ணை தெற்கு வண்ணார்பண்ணை மேற்கு கொத்தணிகளில் கடமை புரிபவர்களை நாளை யாழ். இந்து குமரசுவாமி மண்டபத்திலும்—

கூடுமாறு கேட்கப்பட்டிருக்கிறது.

(உ)

## திண்டுக்கல்லில் இரு போராளிகள் கைது!

சென்னை, அக். 23

திண்டுக்கல் புறநகர்ப் பகுதியில் அடுக்குமாடிக் கட்டடம் ஒன்றில் இருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இருவர் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டனர் என்று இந்திய வானொலி அறிவித்தது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக, முக்கிய சந்தேக நபராகத் தேடப்பட்டு வந்த சிவராசனின் நெருங்கிய கூட்டாளிகளே கைது செய்யப்பட்டவர்கள் என்று கூறப்படுகின்றது.

அவர்களைக் கைது செய்ய முயன்ற போது அவர்கள் இருவரும் பொலீஸாரை நோக்கி சுட முயற்சித்தனர் என்றும்—

சயனைட் மாத்திரைகள் விழுங்க முயன்றனர் என்றும்—

இரண்டாம் மாடி ஜன்னல் வழியாகத் தப்பி ஓட முயன்றனர் என்றும்— பொலீஸார் தெரிவித்தனர்.

கைதானவர்களிடமிருந்து நூறு வாட் தசவல் தொடர்பு சாதனமும் ஒவ்வொன்றும் 140 கிறாம் எடையுள்ள 6 தங்க பிஸ்கட்டுகள் மற்றும் பெருமளவு பணமும் கைப்பற்றப்பட்டன ...

(உ-எ)

### 1987 யாழ்ப்பாணத்தில்

## காணாமற்போன வாகனம் மீண்டும் மக்கள் வங்கியிடம்

கொழும்பு, அக். 23

1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வைத்து காணாமற்போன மக்கள் வங்கிக்குச் சொந்தமான "நிசான் சொனி" இன வாகனம் கொழும்பில் கண்டு பிடிக்கப்பட்டு உரிமையாளரான மக்கள் வங்கியிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனத்தை மூன்றரை லட்சம் ரூபா பிணையில் மக்கள் வங்கியிடம் ஒப்படைக்க கொழும்பு பிரதம நீதிவான் சாந்த அம்பேபிட்டிய கடந்த புதன்கிழமை உத்தரவிட்டார்.

கொழும்பு புறக்கோட்டையில் நிறுத்தப்பட்டிருந்த சமயம் இந்த வாகனம் தகவல் ஒன்றின் பேரில் பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டது.

வாகனத்தைக் கைப்பற்றிய சமயம் பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட சோதி, பேரம்பலம் பரமேஸ்வரன், கலீல் ஆகிய மூவர் மீதான வழக்கை நீதிவான் அடுத்த ஆண்டு ஜனவரி 22 ஆம் திகதி வரை ஒத்தி வைத்தார்.

யாழ்ப்பாணம் ஜின்னா வீதியைச் சேர்ந்த எம். கலீல் என்பவர் 14 ஸ்ரீ 5670 போலி இலக்கம் உடைய பிரஸ்தாப வாகனத்தை கடந்த வருடம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த பேரம்பலம் பரமேஸ்வரன் என்பவரிடம் ஒன்றரை லட்சம் ரூபாவுக்கு விற்றார் என்றும்—

அந்த வாகனம் கடந்த ஜூலை மாதம் கொழும்பு புறக்கோட்டை ஐந்தாம் குறுக்குத் தெருவில் நிறுத்தப்பட்டிருந்த சமயம், அதே இலக்கம் உள்ள மற்றொரு வாகனத்தில் வந்த ஒருவர் சந்தேகம் கொண்டு புறக்கோட்டை அரசடிச் சந்தியில் உள்ள பொலீஸாருக்குத் தகவல் கொடுத்ததை அடுத்து இந்த மோசடி அம்பலமானது என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

இந்த வாகனத்தின் உண்மையான இலக்கம் 13 ஸ்ரீ 7467 என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த)

## பின்போடப்பட்டது

இன்று புதன்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமாகவிருந்த யாழ்ப்பாண வலயப் பாடசாலை ஆரம்ப ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ் - கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் இதனைத் தெரிவித்துள்ளார்.

[இ]

## தேசிய சேமிப்பு வங்கிக் கிளை

பருத்தித்துறை, அக். 23

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக்கிளை இன்று புதன்கிழமை திறக்கப்படவுள்ளது

[இ-118]

## சட்டமாணிப் பட்டம்

திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய நிலையத்தின் 91/92 ஆம் வருட சட்டமாணிப்பட்ட பாடநெறிக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 31 ஆம் திகதி வரை ஏற்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பாடநெறிக்கான விண்ணப்பப்படிவங்கள் கடந்த 15 ஆம் திகதி முதல் விநியோகிக்கப்படுகின்றன [இ-3]

## வலைப்பாட்டில் தரையிறங்கிய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மேற்கேயுள்ள பெரும் கடற் பகுதியிலிருந்து பீரங்கி வேட்டுக்கள் முழங்கத் தொடங்கின.

மன்னார் பெரும் கடற் பகுதியில் இருந்தும், மண்டைதீவுக் கடற் பகுதியிலிருந்தும் பல பீரங்கிப் படகுகளிலும், தரையிறங்கு படகுகளிலும் முன்னேறி வந்த துருப்புகள் வலைப்பாட்டுக்குச் சற்று வடக்கேயுள்ள கடற்கரையோரத்தில் தரையிறங்கின.

அவ்வேளை அப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைத் துருப்புகளுக்கும் இடையே கடும் சண்டை மூண்டது

தரையிறங்கிய துருப்புகள், விமானங்கள் இடைவிடாது குண்டு மழை பொழிய அவற்றின் உதவியோடு முன்னேறின.

பெருங்கடல் மூலம் கொண்டுவரப்பட்டு வலைப்பாட்டில் தரையிறக்கப்பட்ட கவச வாகனங்களை முன்னே விட்டு, படையினர் நகர்ந்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வலைப்பாட்டுப் பகுதிக்கும் பூநகரி—சங்குப்பிட்டி பகுதிக்கும் இடைப்பட்ட, மணற்பாங்கான பொட்டல் வெளிப் பிரதேசம் படையினரின் நகர்வுக்கு வாய்ப்பாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலையில் படையினர் பூநகரிப் பகுதியிலும் சங்குப்பிட்டித் துறையிலும் நிலைகொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முழு நாளும் அப் பகுதியில் மாறி, மாறி இடம் பெற்ற விமானக் குண்டு வீச்சாலும், பீரங்கித் தாக்குதல்களாலும் சங்குப்பிட்டி, ஆலடி, பரப்பக்கிராய், கில்லடி, வெட்டுக்காடு, மட்டுவில் நாடு வாடியடி, செட்டியார் மடம், குமிழமடம், கறுக்காய்த்தீவு, கேரதீவு, கல்முனை, கௌதாரிமுனை, பள்ளிக்குடா ஆகிய பகுதிகளில் வீடுகள், குடிசைகள், கட்டடங்கள் சேதமாகியதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் சேதவிவரங்கள் குறித்து விளக்கமான தகவல்கள் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரைக் கிடைக்கவில்லை.

முன்னேறி வந்த படையினருக்கு உதவியாக - பூநகரிப் பகுதியை நோக்கி - ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்தும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-15-3-5-51-131-30)

## யாழ். நகரப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குறுக்கும் நெடுக்குமாகச் சுற்றிய அவ்ரோ மொத்தம் 6 குண்டுகளை வீசியது.

யாழ். தொலைத்தொடர்புப் பரிவர்த்தனை நிலையத்தை இலக்குவைத்தே குண்டுகள் வீசப்பட்டதாகத் தெரிகிறது

பீப்பாய்க் குண்டுகளில் ஒன்று கொட்டடி வைரவர் கோவில் ஒழுங்கையிலும்—

இன்னொரு குண்டு முற்றவெளிப் பகுதியில் உள்ள புதிய பஸ் நிலையத்தின் அருகிலும் —

ஏனைய குண்டுகள், கோட்டை, தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்துக்கு அருகிலும் வீழ்ந்து வெடித்தன.

மாலையில் இடம்பெற்ற குண்டு வீச்சில் கொட்டடியைச் சேர்ந்த ரி. அம்பிரட் (வயது 42) என்ற தொழிலாளி காயமடைந்தார். விமானக் குண்டுச் சத்தத்தால் யாழ். ஆஸ்பத்திரி நோயாளர்கள் பீதியடைந்து காணப்பட்டனர்.

(உ-5-15-51-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செஞ்சோலை திறப்பு விழா; தலைவர் பிரபா வாழ்த்து!

யாழ்ப்பாணம், அக். 23

விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவின் ஏற்பாட்டில் செஞ்சோலை சிறுவர் இல்லம் நேற்றுப் பிற்பகல் திறந்து வைக்கப்பட்டது.

இந்த சிறுவர் இல்லத் திறப்பு விழா தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்தார். அந்தச் செய்தி வருமாறு:

இந்த செஞ்சோலை சிறுவர் இல்லம் ஒரு புதிய, புரட்சிகரக் கல்வியின் பரிசோதனைக் களமாக அமையவேண்டும்; மண் பற்றும், மக்கள் பற்றும் கொண்ட ஒரு புதிய அறிவு சார் பரம்பரையை உருவாக்கித்தர வேண்டும்; சுபீட்சமான தமிழீழ சமுதாயத்தைப்படைக்கும் தேசநிர்மாணிகளை தோற்றுவிக்க வேண்டும்.

வரலாற்றுப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த செஞ்சோலை வளாகத்தில், நாம் இன்று இந்த இளம் விதைகளைப் பயிரிடுகிறோம். இவை வேர் விட்டு வளர்ந்து, விழுதுகள் பரப்பி, விருட்சங்களாக மாறி, ஒரு காலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாக செழிப்புற வேண்டும் என்பதே எனது ஆவல். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## மூதூரில் தமிழர் காயம்

மூதூர், பச்சனூர் பகுதியில் கடந்த ஞாயிறன்று இராணுவத்தினர் தமிழ் மகன் ஒருவரைத் தாக்கிக் காயப்படுத்தினர்.

மெயின்காமத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை சுந்தரலிங்கம் என்பவரே காயமடைந்தவர் ஆவார். [ஓ]

## பிரதமர் ராவ் தமிழகம் வருகிறார்

சென்னை, அக். 23

பிரதமர் பி. வி. நரசிம்மராவ் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தமிழகத்திற்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

பிரதமரான பின்னர் திரு. நரசிம்மராவ் தமிழகத்திற்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும். [ஓ-எ]

## சபாநாயகர் தலைமை வகிக்கும் கூட்டங்களில் எதிரணி பங்குபற்றாது

கொழும்பு, அக். 23

சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது தலைமையேற்று நடத்தும் எந்தக் கூட்டத்திலும், தாம் கலந்து கொள்ள முடியாது என்று எதிர்க்கட்சியின் தலைவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நாடாளுமன்றத்தில் கணிசமான உறுப்பினர்களின் நம்பிக்கையை சபாநாயகர் முகம்மது இழந்து விட்டார் என்றும் எதிரணியினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுதந்திரக் கட்சி, ஐக்கிய சோஷலிச முன்னணி, நவசமசமாஜக் கட்சி மற்றும் ஈ. பி. ஆர். எல். எவ். ஆகியவையே மேற்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளன.

இதே சமயம் இந்த எதிர்க்கட்சிகள் நான்கும் கடந்த திங்கள் இடம்பெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் குழுக் கூட்டத்தில் இருந்து வெளி நடப்புச் செய்துள்ளன.

சபாநாயகர் தமது பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை, இந்த வெளிநடப்பின் மூலம் எதிரணியினர் வலியுறுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [ஓ-எ]

## இந்தியாவுக்கு வெற்றி!

ஷார்ஜா, அக். 23

ஷார்ஜாவில் மூன்று நாடுகளுக்கிடையில் நடைபெறும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் கலந்து கொள்ளும் தகுதியை இந்தியா பெற்றது.

நேற்று மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் 3 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றதன் மூலம் இந்திய அணி இறுதியாட்டத்துக்குத் தெரிவானது.

மேற்கிந்திய அணி பெற்ற 146 ஓட்டங்களுக்கு கடுதலாக, 37.3 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 147 ஓட்டங்களை இந்தியா பெற்றது.

4 விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய வீரர் டெண்டுல்கர் ஆட்டத்தின் சிறப்பு வீரராகத் தெரிவானார்.

இந்த ஆட்டத்தில் இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்திய கபில்தேவ், மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளில் மொத்தம் 200 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றுக்கொண்டார்.

## சிறைச்சாலைகளில் அகதிகள்

சென்னை, அக். 23

ஈழத் தமிழ் அகதிகளைத் தங்க வைப்பதற்காக தமிழகத்தில் உள்ள 24 சிறைச்சாலைகள் அகதி முகாம்களாக மாற்றப்படுகின்றன.

தம்மைப் பதிவு செய்யத் தவறிய ஈழத் தமிழர்களை, தடுத்து வைத்திருக்கும் அகதி முகாம்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-த)

# எழுவைதீவு வாசிகள் மூவர் கடல்வழியாகயாழ்.வந்தனர்

### கர்ப்பிணிப் பெண் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், அக். 23

எழுவைதீவு வாசிகளான கணவன், மனைவி, அவரது மகள் ஆகிய மூவரும் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

கர்ப்பிணியான பாவிலுப்பிள்ளை அமலநாயகி [35 வயது], அவரது தந்தை ஆசிர்வாதம் மடுத்தீன் [58 வயது], தரயாரரின் அந்தோ வியாப்பிள்ளை [56 வயது] ஆகியோரே அந்த மூவரும் ஆவர்.

கர்ப்பிணிப் பெண் மகப்பேற்றிற்காக யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். ஐந்து குழந்தைகளுக்குத் தாயான இவர் ஒரு விதவை ஆவார்.

இவரது கணவன் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் மாரடைப்பு ஏற்பட்டு, தக்க வசதியின்றி மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

மகப்பேற்றிற்காக அனலை தீவு ஆஸ்பத்திரியில் இந்தப் பெண் சேர்க்கப்பட்டிருந்தார் என்றும்—

அங்கு டாக்டர் இல்லாத காரணத்தினால், படையினர் அவரையும் பெற்றோரையும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர் என்றும் சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் அனலைதீவில் இருந்து கடற்படைப் படகில் காரைநகருக்குச் சென்று அங்கிருந்து நேற்றுக் காலை காங்கேசன்துறை அனுப்பப்பட்டு, பின்னர் கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு மூவரும் வந்து சேர்ந்ததாகவும்—

அங்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டு, அவர்களின் உதவியுடன் மூவரும் யாழ். வந்து சேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது

எழுவைதீவு மக்களுக்கும் அனலைதீவிலேயே ஆஸ்பத்திரி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. [ஓ-15]

## கட்டுவன், வயாவிளானிலும் நேற்று விமானத் தாக்குதல்

பலாலி முகாம் பகுதியில் கட்டுவன், குப்பிளான், வயாவிளான் பகுதிகளிலும் நேற்றுக் காலை 9-30 மணியளவில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்று முன்தினம் மாலை 6-30 மணியளவிலும் பலாலியை அண்டிய பகுதிகளில் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இது இவ்வாறிருக்க, பலாலி விமான நிலையத்தில் இருந்து நேற்று பொம்மர்கள், அவ்ரோ விமானங்கள், ஹெலிகள் மாறி, மாறி அங்கிருந்து புறப்பட்டுச் செல்வதையும், தரையிறங்குவதையும் அவதானிக்க முடிந்தது [ஓ 68]

## நிவாரணக் கொடுப்பனவு: பெறுமதி குறைப்பில்லை

அகதிகளுக்கான நிவாரணக் கொடுப்பனவில் மாற்றமில்லை என்று அறிவிக்கப்படுகிறது. மாற்றம் செய்யப்படும் என்ற வதந்திகளில் உண்மை இல்லை எனவும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்துள்ள 1 இலட்சத்து 52 ஆயிரத்து 355 குடும்பங்களைச் சேர்ந்த 6 இலட்சத்து 73 ஆயிரத்து 685 பேர்களுக்கு தற்போது உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படுவதாக அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் எம். ஐ. எப். ரபீக் கடந்த வாரம் தெரிவித்தார்.

ஒரு குடும்பத்துக்கு, 1 வாரத்துக்கு 315 ரூபா பெறுமதியான உதவி வழங்கப்படுகிறது.

இதேவேளை- வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடாக, 15 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரை, புனர்வாழ்வு, புனரமைப்பு சமூக நல அமைச்சால் தற்போது வழங்கப்படுவதாகவும் அவர் சொன்னார்.

இதே வேளை —

100 மெட். தொன் அரிசி, 90 மெட். தொன் மா, 5 மெட். தொன் பால் மா, 15,800 லீற்றர் மண்எண்ணெய் ஆகியன 22 லொறிகளில் கிளிநொச்சிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. [அ-த]

## கறுப்புசாமி விவகாரம்; தவறான ஒரு நடவடிக்கை

### மத்திய அமைச்சர் தகவல்

சென்னை, அக். 23

ஆகாசவாணி செய்தியாளர் திரு. அ. கறுப்புசாமி இலங்கையில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ள விடயம், தவறான ஒரு நடவடிக்கையாகும் என்று மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஜித் பாஞ்சா தெரிவித்துள்ளார்.

இந்தச் செயல் இந்தியாவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கை என கருதிவிட முடியாது என்றும் அவர் சென்னையில் பத்திரிகையாளர் சந்திப்புக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

இதேசமயம் —

திரு. கறுப்புசாமியை வெளியேறும்படி உத்தரவிடுவதற்கான சூழ்நிலை குடியகல்வு, குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளுக்கு எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து இலங்கை வெளியுறவு அமைச்சு, இந்திய தூதரகத்துக்கு பதில் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. (ஓ-த)

## செஞ்சிலுவை தொண்டருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், அக். 23

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரிவுத் தொண்டர்கள் தங்கள் பெயர்களை, இன்று காலை 9 மணிக்கு, வேம்படி வீதியிலுள்ள பிரிவுச் செயலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [ஓ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், காவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23-10-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## நாளை

யாழ்ப்பாணம், அக். 23

சாரணர்களின் யாழ் போறி 75 ஆவது ஆண்டு நிறைவு விழா, நாளை கொக்குவில் இந்துக் கல்லூரியில் பிற்பகல் 3 மணிக்கு எளிமையாக நடைபெறவுள்ளது.

வட மாகாணத்தைச் சேர்ந்த சகல சாரணர்கள், சாரணர் சம்பந்தப்பட்ட சகலரையும் சீருடையில் சமூகம் தரும்படி ஆணையாளர் திரு. ஆ. சுப்பிரமணியம் கேட்டுள்ளார். [ஓ]

## தென்மராட்சிக்கு அகதிகள்

தென்மராட்சி, அக். 23

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தீவகம், யாழ்ப்பாணம் பகுதி மக்கள் தென்மராட்சிநோக்கி வந்துகொண்டிருக்கின்றனர்.

தற்காலிக முகாம்களில் இடநெருக்கடி ஏற்பட்டிருப்பதால் தேவாலயங்கள், பாடசாலைகளில் இவர்கள் தங்கியுள்ளனர். [இ-117]

## தடை நீக்கம்

டோக்கியோ, அக். 23

தென் ஆபிரிக்கா மீதான பொருளாதாரத் தடைகளை நீக்குவது என்று ஜப்பான் அரசு அறிவித்திருக்கிறது. (உ-எ)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவசம்பு அன்னேஸ்வரி

மாங்கொல்லை வீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாக கொண்ட சிவசம்பு அன்னேஸ்வரி 21-10-1991 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிவசம்புவின் அன்பு மனைவியும், சிவபாஸ்கரன் (Deputy Commissioner of Labour) சிவராஜா (Samacon யாழ்ப்பாணம்), சிவராணி, சிவயோகம் (காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சி. நகுலேஸ்வரி, சி. ராஜேஸ்வரி எஸ். கனகசபை, சி. பத்மராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 1-00 மணிக்கு கொழும்பில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. சிவயோகம் (தவம்)
(மகன்)

159A, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி/0846)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org